1983 பிப்ரவரி 7]

ஆண்டிற்கு 300 லட்சம் செலவாகிறது. மேலும் ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகைக்கு வட்டியை அரசே ஏற்பதினால் ஆண்டு ஒன்றிற்கு சுமார் 81.25 லட்சம் செலவாகிறது. ஹட்கோ கிராம வீட்டு வசதி திட்டத்திற்கு தேவையான கடன் தொகையில் 50 சதவீதம் வழங்குகிறது; மீதி 50 சதவீதம் கடன் தொகையை மாநில அரசே மேட்சிங் கிராண்ட் கான்ட்ரிபியூஷனாக தலைமை சங்கத்திற்கு தருகிறது; இதோடு சங்கத்திற்கு நிதி பற்றாக்குறை ஏற்படும் போதெல்லாம் அரசு வழிவகை முன்பணம், வேஸ்-அண்ட்-மீன்ஸ் அட்வான்ஸ் வழங்குகிறது. எனவே அரசு கிராம வீட்டு வசதி திட்டத்திற்கு பெருமளவில் பண உதவி செய்து வருகிறது என்பது தான் உண்மை. நீங்கள் சொல்வதைப்போல 10 கோடி ஒதுக்குவது, 20 கோடி ஒதுக்குவது என்பதெல்லாம் வராது. 40 ஆயிரம் வீடுகளுக்கு எவ்வளவு பணம் தேவை என்பதைப் பார்த்து அதில் ஒரு பகுதியை அரசு கொடுத்து விட்டு, மீதியை லெண்டிங் இன்ஸ்டிடியூஷன் மூலமாக வாங்கி காரியங்களை நடத்துகிறது. எல்லா பணத்தையும், எல்லா வகையையும் அரசே கொடுக்கவேண்டுமென்றால் ஒரு அரசை நடத்த முடியாது. ஹவுசிங் போர்டிற்குக் கூட பணத்தை ஹட்கோவில் வாங்குகிறோம். குடிதண்ணீர் வழங்குவதற்கு எல்.ஐ.சி.யில் கடன் வாங்குகிறோம். ஒரு குடும்பத்தை நடத்துகிறபோது கூட நாம் கடன் வாங்கிவிட்டு சம்பளம் வாங்கியவுடன் அதைக் கொடுக்கிறோம். பணத் தட்டுப்பாடு ஏற்படுகிற நேரத்தில் வாங்குகிறோம். திரும்ப அவைகளை கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை விரைவில் செய்கிறோம். ஆகவே 40 ஆயிரம் வீடுகள் கட்டுகிற திட்டம் திருப்திகரமாகவே செயல்பட்டு வருகிறது. எங்காவது சிக்கல் இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமவீட்டுவசதி சங்கங்களின் மூலம் கடன் வழங்குகிறபோது வரிசைக்கிரமாக, சீனியாரிட்டி அடிப்படையில் வழங்குகிறார்கள். அதிலேயிருந்து தீ விபத்திற்கு ஆட்படுகிற வீடுகளுக்கு மட்டும் முன்னுரிமை அளித்து, வரிசைக்கிரமமாக வரவேண்டும் என்பதை மாற்றி கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கடன் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மற்ற கண்டிஷன்கள் எல்லாம் சரியாக இருந்தால் முன்னுரிமை கொடுப்பதைப் பற்றி அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு 40,000 வீடுகள் கட்டப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த 40,000 வீடுகளுக்கும் பணம் கிராமியக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம்